

சென்னை, மெரினா கடற்கரையில், (25.08.2024) அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என். நேரு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் "நம்ம மெரினா நம்ம பெருமை என்ற விழிப்புணர்வு இயக்கத்தின் தொடக்க விழாவில், மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான அதிநவீன கடற்கரை மோட்டார் வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர்கள் க.தனசேகரன் (கணக்கு), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), தா.இளைய அருணா (நகரமைப்பு), நியமனக் குழு உறுப்பினர்கள் இராஜா அன்பழகன், சொ.வேலு, மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 160வது வட்டத்தில் "இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கும் பணியை ஆய்வு செய்து, இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்களை மாவட்டச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சேர்த்தார். அருகில் பகுதிச் செயலாளர் பி.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மாணவர்களின் கோரிக்கை ஏற்பு!

# செமஸ்டர் தேர்வு கட்டண உயர்வு ரத்து!

## உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தகவல்!

சென்னை, ஆக. 27 -

உயர்த்தப்பட்ட அண்ணா பல்கலைக் கழக செமஸ்டர் தேர்வுக் கட்டணம் மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, நிறுத்தி வைக்கப்படுவதாக அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.



அண்ணா பல்கலைக் கழகம் வெளியிட்டிருந்த அறிவிப்பின்படி, இளநிலை பொறியியல் படிப்புக்கான தேர்வுக் கட்டணம் தாளுக்கு ரூ.150லிருந்து ரூ.225 ஆகவும், முதுநிலை பொறியியல் படிப்புக்கான தேர்வுக் கட்டணம் தாளுக்கு ரூ.450 லிருந்து ரூ.675 ஆகவும் உயர்த்தப்பட்டிருந்தது.

இதுதவிர ஆய்வறிக்கை கட்டணம் இளநிலை மாணவர்களுக்கு ரூ.300ல் இருந்து ரூ.450 ஆகவும், பட்டச் சான்றிதழுக்கான கட்டணம் ரூ.1000/-லிருந்து ரூ.1500 ஆக உயர்த்தப்பட்டது.

சான்றிதழ்களை டிஜிலாக்கரில் பதிவேற்றம் செய்வதற்கான கட்டணமும் ரூ.1000 லிருந்து ரூ.1500 ஆக உயர்த்தப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட அனைத்துப் பல்கலைக் கழகங்களின் நடைமுறைச் செலவுகள் அதிகரித்து வரும் நிலையில், அதற்கேற்றவாறு பல்கலைக் கழகங்களின் வருவாயை உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக காரணம் சொல்லப் பட்டது. இளநிலை பொறியியல் பயிலும் மாணவர்கள் பருவத்துக்கு 9 தேர்வுகள் எழுத வேண்டும். ஒவ்வொரு தாளுக்குமான கட்டணம் ரூ.75 ஆக அதிகரித்ததால் கூடுதல் தொகையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

மாணவர்கள் பலரும் கட்டணத்தை தங்களால் கட்ட இயலாது எனவும், அதனைத் திரும்ப பெறும்படி கோரிக்கைகள் வைத்து வந்தனர். அதன்படி, கட்டண உயர்வு நிறுத்தி வைக்கப்படுவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அண்ணா பல்கலைக் கழகத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் பொன்முடி கூறுகையில், செமஸ்டர் தேர்வு கட்டண உயர்வு குறித்த அறிவிப்பானது அண்ணா பல்கலைக்கழக இணையதள பக்கத்தில் வெளியானது.

இது கடந்த ஆண்டு சிண்டிகேட் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு. ஆனால் அப்போது அதனை நான் நிறுத்தி வைத்திருந்தேன். இந்த வருடம் மீண்டும் அந்த அறிவிப்பு வெளியானதால் கிராமப்புற மாணவர்கள் பலரும் கவலை அடைந்தனர். மாணவர்கள் சார்பில் கட்டண உயர்வை நிறுத்தக் கோரி கோரிக்கைகளும் வைக்கப்பட்டிருந்தது.

மேலும் இந்த கட்டண உயர்வானது மாணவர்களை மிகவும் பாதிக்கும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னிடம் கூறினார்.

அதனைத் தொடர்ந்து, அண்ணா பல்கலைக்கழக தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்களுடன் இணைந்து ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்ட இந்த தேர்வுக் கட்டணமானது நிறுத்தி வைக்கப்படுகிறது. இனி வரும் காலங்களிலும் தேர்வுக் கட்டணம் உயர்த்தப்படாது. புதிய சிண்டிகேட் ஆட்சி மன்றத்தில் கொண்டுவரப்பட்டால் மட்டுமே இது அமல்படுத்தப்படும். அதுவரை இந்த கட்டணம் மாற்றப்படாது. எனவே மாணவர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம்.

தன்னாட்சி பெறாத கல்லூரிகள் வாங்கும் அதே கட்டணத்தை தான் தன்னாட்சிக் கல்லூரிகளும் வாங்க வேண்டும். மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும். அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்கள் முறைகேடுகள் தொடர்பாக அமைக்கப்பட்ட குழு விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்த முறைகேடுகள் இப்போது அல்ல 10 வருடங்களாக நடைபெற்றுள்ளது. எனவே கடந்த 10 ஆண்டுகளின் தரவுகளை கேட்டுள்ளோம். அதன்படி வெகு விரைவில் இந்த விசாரணை முடிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.




அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரசுப் பள்ளி மாணவர்களோடு ஹாங்காங் பல்கலைக்கழகத்திற்கு சென்றார். அப்பல்கலைக் கழகத்தில் உள்ள ஆராய்ச்சி மையத்திற்கு மாணவச் செல்வங்களை அழைத்துச் சென்றார். அப்பல்கலைக் கழக பேராசிரியர்கள் உயர்கல்விப் பயில பன்னாடுகளில் உள்ள கல்வி நிலையங்களில் கல்வி உதவித் தொகை பெறுவது தொடர்பான ஆலோசனைகளை மாணவர்களுக்கு வழங்கினார்கள். முன்னதாக அந்நாட்டிலுள்ள Ocean Park பூங்காவிற்கும் மாணவச் செல்வங்கள் சென்று வந்தார்கள்.

